**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC .No.118/2024
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : பாலமுருகன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of December 2024.

09.12.2024

(எதிரிகள் 1 முதல் 2 ஆஜர், எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** கடந்த 27.03.2024ம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் 1ம் எதிரி முனியசாமி, 2ம் எதிரி மணிகண்டன், 3ம் எதிரி ராமச்சந்திரன், இளம்சிறார் பிரவின் ஆகியோர் அசா.1 அங்கதனை பார்த்து தேவ்டியாமவனே என்று அசிங்கமாக

பேசினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரி முனியசாமி இரும்பு பைப்பால் அசா.1 அங்கதனை இடதுபக்க நெஞ்சில் மற்றும் வலது பக்க முதுகில் காயம் ஏற்படுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் எதிரி மணிகண்டன், 3ம் எதிரி ராமச்சந்திரன், இளம்சிறார் பிரவின் ஆகியோர் அசா.1 அங்கதனை கட்டை கம்பால் உடம்பில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2)1ம் எதிரி முனியசாமி, 2ம் எதிரி மணிகண்டன், 3ம் எதிரி ராமச்சந்திரன், இளம்சிறார் பிரவின் ஆகியோர் அசா.1 அங்கதனை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. கீழத்தூவல் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுடன் செய்துகொண்ட சமாதானத்தால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC .No.118/2024
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : அழகர் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of December 2024.

09.12.2024

(எதிரிகள் 1 முதல் 2 ஆஜர், எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 27.03.2024 ம் தேதி காலை 7.30 மணியளவில் அசா.1 அங்கதன் கடையிலிருந்து 3 கடைக்கு தள்ளி நான் டீ குடித்துகொண்டிருந்தேன். சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தபோது அசா.1 அங்கதனும், 1ம் எதிரி முனியசாமியும் தகராறு செய்து கொண்டிருந்தார்கள். நான்சென்று அவர்களை விலக்கிவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற இடத்தில் அதிகமாக கூட்டம் இருந்ததால் யார்யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் பார்க்கும்போது யாருக்கும்,

எந்தகாயமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். அசா,1 எனது மைத்துனர் ஆவார். எதிரிகள் எனது உறவினர்கள் ஆவார். அசா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC .No.118/2024
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : அங்கதன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of December 2024.

09.12.2024

(எதிரிகள் 1 முதல் 2 ஆஜர், எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 27.03.2024 ம் தேதி நான் பரமக்குடி சென்றுவிட்டு கீழத்தூவல் பேருந்து நிறுத்தம் அருகே காலை 8.00 மணியளவில் எனது கடையை திறக்க வரும்போது 10 நபர்கள் எனது கடைக்கு முன்பாக அமர்ந்திருந்தார்கள். அதில் 1ம் எதிரி முனியசாமியிடம் ஏற்கனவே எனது இடத்தை அளப்பதற்கு அளக்க விடாமல் தடுத்துவிட்டு தற்போது ஏன் என் கடைக்கு முன்பாக அமர்ந்திருக்கிறாய் என்று கேட்டேன். நான் அதற்கு 1ம் எதிரி முனியசாமி என்னிடம் நான் உன் கடையில் அமரவில்லை , ரோட்டில் அமர்ந்திருப்பதாக கூறினார்.

2)அப்போது 1ம் எதிரி முனியசாமியின் அக்கா மகன்களான 2ம் எதிரி மணிகண்டன் மற்றும் இளவர் பிரவின்குமார் ஆகியோர் அங்கு இருந்தார்கள். 1ம் எதிரி முனியசாமி என்னிடம் பேசிவிட்டு நகர்ந்த போது அங்கிருந்த இளவர் பிரவின்குமார் இவனை என்ன பேசவிட்டு கொண்டிருக்கிறாய் என்று

கூறிகொண்டு கீழே கிடந்த மலைவேம்பு கம்பை எடுத்து எனது நெஞ்சில் அடித்தார். 1ம் எதிரி முனியசாமி கம்பை வைத்து எனது முதுகில் அடித்தார். அப்போது அழகரும், பாலமுருகனும் சண்டையை விலக்கிவிட்டார்கள். என்னை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு முதுகுளத்தூர் சிகிச்சைக்கு கொண்டு சென்றார்கள். நான் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து புகார் மனு வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1)எனக்கும், எதிரியின் வகையறாவிற்கும் இடம் சம்மந்தமான முன்விரோதம் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடம் என்றால் சரிதான். போக்குவரத்தும் அதிகமாக உள்ளது என்று சொன்னால் சரிதான். புகார் வாக்குமூலம் நான் எழுதி கொடுத்தேனா என்றால் எழுதிகொடுத்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் மயங்கிவிட்டேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும், புகார் மனுவிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். கீழத்தூவல் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதர நிலையம் உள்ளது என்றால் சரிதான்.

2) புகார் மனுவில் யார்யார் என்னை எங்கு தாக்கினார் என்று புகார் மனுவில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது புகார் மனுவில் எத்தனை நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளேன் என்றால் 4 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளேன். மருத்துவரிடம் 3 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளேன் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்த அன்று 1ம் எதிரி முனியசாமியின் அக்கா பத்ரகாளி என்பவர் கீழத்தூவல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் அடிப்படையில் என்மீதும், என் மகன் எழில் , ஆண்டாள், சகாதேவன் மற்றும் முத்துவிஜயன் ஆகியோர் மீது புகார் கொடுக்கப்பட்டு குற்ற எண். 48/2024 என்று வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சம்பவம் நடைபெற்ற அன்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை. 2 நாள் கழித்துதான் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

3)மேற்படி வழக்கில் நான் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தபட்டேன் என்றால் சரிதான். ஆனால் சம்பவ இடத்தில் கிடையாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்

இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 500 மீ இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் காவலர் குடியிருப்பு உள்ளது என்றாலும், அதில் காவலர்கள் வசித்து வருகிறார்கள் என்றாலும் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக புகார் எப்போது கொடுத்தேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. எனக்கு மயக்கம் எப்போது தெளிந்தது என்றால் மருத்துவமனையில் சிகிச்சை அளித்த போது தெளிந்தது.

4)நான் அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தில் தாலுகா செயலாளராக உள்ளேன். நான் அடிக்கடி காவல் நிலையம் சென்று வருவேன் என்று சொன்னால் சரிதான். நான் சொல்லுவது போல் சம்பவம் நடந்திருந்தால் அருகில் உள்ள காவல் நிலையம் சென்று புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், அதேபோல் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்திருப்பேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து கொண்டு எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் நான் கூறுவதுபோல் இல்லை என்பதால் தான் நான் முறையாக சிகிச்சை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5)எனது புகார் மனுவில் எனது கடைக்கு முன்பாக 10 நபர்கள் அமர்ந்திருந்தார்கள் என்று புகார் கொடுத்துள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் மயக்க நிலையில் இருந்ததால் தான் என்ன விவரம் எனது புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியவில்லை. இடப்பிரச்சனை காரணமாக எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.